பக்கங்கள் : ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 09 திங்கட்கிழமை (25.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 300

## பேச்சுக்கு உறுதியான நடவடிக்கை எடுக்க அரசுக்கு அமெ. வற்புறுத்து



### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்களவிடம் தெரிவிப்பு

நியூயோர்க்,செப்.25

விடுதலைப் புலிகளுடன் மற்றொரு சுற்று அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்கச் செய்வதற்கு நோர்வே அனுசரணைத் தரப்பு முயற்சிக்கின்றது. அந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசும் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு இலங்கையை வற்புறுத்திக் கோரியிருக்கின்றது அமெரிக்கா.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் அம்மையார் இந்தக் கோரிக்கையை நேரிலேயே விடுத்திருக்கின்றார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தை ஒட்டி நியூயோர்க்கில் கூடியிருக்கும் பல்வேறு நாட்டுத் தலைவர்கள், பொதுச்சபைக் கூட்டத் துக்கு அப்பால், தமக்கிடையே தனித் தனிச் சந்திப்புகளையும், கலந்துரையாடல்களையும் நடத்திவருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே அமெரிக்க மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர்களிடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் நியூயோர்க்கில் இடம்பெற்றிருக்கின்றது.

அப்போதே மேற்படி வற்புறுத்தலை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர், இலங்கை அமைச்சரிடம் முன்வைத்தார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசுக்கும், புலிகளுக்கும் (06ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு வரத் தயார் என்ற உறுதிமொழி தலைவர் பிரபாவிடமிருந்து வரவேண்டும்



### பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி தெரிவிப்பு ஒரே நாட்டின்கீழ் அதிகாரத்தைப் பகிரவும் சம்மதமாம்

லண்டன், செப்ரெம்பர் 25

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதற்கு முன்பாக பேச்சுக்குவர சம்மதம் தெரிவிக்கும் தெளிவான உறுதிமொழி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடமிருந்து வரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

"விடுதலைப் புலிகளிடம் நாங்கள் ஒரு அரசியல் தீர்வைக் கொடுக்கப்போகிறோம். அதன்படி ஒரே நாட்டின் கீழ் - ஒரே கொடியின் கீழ் - அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

கியூபா மற்றும் அமெரிக்கா விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய வழியில் - லண்டனில் வைத்து பி.பி.ஸி. உலக சேவையின் 'தமிழோசைக்கு' வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே ஜனாதிபதி மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

### அவசர நோயாளர்கள் ஒன்பதுபேர் விமானத்தில் கொழும்பு சென்றனர்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவசர நோயாளர்களில் 9 பேர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று இராணுவ விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்த நோயாளர்கள் 9 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்புப் பிரிவின் கட்டளைத் தளபதியிடம், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்நோயாளர்கள் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத்

(06ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சிற்கு அரசு உறுதிமொழி கோருவது பற்றி இன்னமும் முறைப்படி எமக்குத் தகவல் இல்லை

### உத்தியோகபூர்வமாக கேட்டால் தலைமைப்பீடம் முடிவுசெய்யும் என்கிறார் இளந்திரையன்

கிளிநொச்சி, செப்.25

பேச்சுத் தொடர்பான உறுதிமொழி தலைவர் பிரபாகரனிடம் இருந்து வரவேண்டும் என்று அரசுத் தரப்பில் கூறப்படுவது பற்றி நோர்வே எங்களிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. அப்படி ஒரு கோரிக்கையை அவர்கள் உத்தியோகபூர்வமாக முன்வைத்தால் எமது தலைமைப்பீடம் அது பற்றி முடிவுசெய்யும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன். பேச்சு நடத்த முன்வருவது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரிடம் இருந்து உறுதிமொழி வரவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பது தொடர்பாக கருத்துக்கேட்டபோதே புலிகளின் இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு அவர் வழங்கிய செவ்வியில் கூறியிருப்பதாவது:-

இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கைக்கு அமைய பேச்சுத் தொடர்பாக எங்களது நிலைப்பாட்டை - இணக்கத்தை - கடைசியாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த நோர்வேயின் தூதரிடம் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். அவரிடம் சகல விடயங்களையும்

(06ஆம் பக்கம் பார்க்க)



## திருமலையிலிருந்து ஆயிரம் பேருடன் யாழ்ப்பாணத்துக்கு இன்று கப்பல்!

### வவுனியாவில் தவம் கிடந்தோருக்கு வாய்ப்பு

வவுனியா,செப்.25

யாழ். குடாநாட்டுக்குச் செல்லவென கடந்த 40 நாட்களுக்கு மேலாக வவுனியாவில் தங்கியிருந்தவர்களில் ஆயிரம்பேர் இன்று திருகோணமலைக்கு பஸ் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவர்கள் திருகோணமலையிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரையின் பேரில் வவுனியா மேலதிக அரச அதிபர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு தேவைகளுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு சென்ற சுமார் ஆயிரத்து 600 பேர் கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்டதால் மீண்டும் தமது சொந்த இடம் திரும்ப

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிறுவனங்களின் கருத்துக்கு ஆணையாளர் திலகரட்ண மறுப்பு!

### யாழ்ப்பாணத்தில் மனித அவலம் ஏதுமில்லை

கொழும்பு,செப்.25

யாழ்ப்பாணத்தின் நிலைவரங்கள் தொடர்பாக ஐ.நா. சபையின் அமைப்புகள் தவறான தகவல்களை வெளியிடுகின்றன என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.டி.திலகரட்ண கண்டனம் தெரிவித்திருக்கிறார். யாழில் பெரும் மனித அவலம் ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது என்று ஐ.நா. நிறுவனங்கள் கூறுவதில் எந்த உண்மையும் இல்லை என்று அவர் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையில் மனித அவலம் ஏதும் இல்லை. போதுமான உணவுப் பொருள்கள் உள்ளன. இது தொடர்பில் எவரும் முறைப்பாடு செய்யவில்லை. ஐக்கிய நாடுகள் சபை

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி 2ஆவது கிளையின்
முகாமையாளராகிய

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் துன்பமும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சிற்றி ஹாட்வெயர்ஸ் அன் ஸ்ரோர்ஸ்*
*55,57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 25 ★ 10 ★ 1935



விண்ணில் 26 ★ 08 ★ 2006

### அமரர் ஆசிர்வாதம் ஸ்ரீபன்

**(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள ஊழியர்)**

"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவரும் என் மன்றாட்டைக் கேட்டருளினார்" (தி.பா. 40:1)

கடந்த 26.08.2006 ஆம் திகதி காலமான எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் அனுதாப செய்திகள் வழங்கியோருக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (25.09.2006) திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு வளன்புரம் புனித ஆசையப்பர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதில் அனைவரும் கலந்துகொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

975/15, வளன்புரம்,
கொழும்புத்துறை. (53896)

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### யோகேந்திரன் தசந்தன்



82/15, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேந்திரன் தசந்தன் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகேந்திரன்-சரோஜினிதேவி தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற இராசதுரை, அரியகுழந்தை மற்றும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-மாணிக்கம் தம்பதியரின் பேரனும் அனோஜன், சுகன்யா, டிக்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**82/15, பருத்தித்துறை வீதி,**
**3ஆம் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.** (53900)

தகவல்: **குடும்பத்தினர்.**

### செல்வி நாகலிங்கம் ஈஸ்வரி



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5/2, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வி நாகலிங்கம் ஈஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (23.09.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் லோகலீலாவதி (காலி), சுந்தரலிங்கம் (இ.போ.ச., காரைநகர்), மனோரஞ்சிதம், இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன் (யாழ்.செயலகம்.), விஜயராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தராசபிள்ளை (காலி வர்த்தகர்), சரோஜினிதேவி (கிளிநொச்சி), நவரெத்தினம் (டோகா), மோகனேஸ்வரன் (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனியும் நாகரூபன், நாவேணி, தர்ஷினி, நாகசொரூபன், நிசாந்தினி, விநோதினி (சுவிஸ்), சிவானி (மாணவி, யா.ப.கழகம்), தாரணி (போதனா வைத்தியசாலை, யாழ்.), நவநீதன் (பொறியியலாளர் - தாய்லாந்து), தமிழினி (மாணவி, மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), சோபிதன் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் அகிலா, அம்பிகைவாசன் (பொறியியலாளர், கிளிநொச்சி), யோகேஸ்வரன் (ஆசிரியர் - கிளிநொச்சி), கிரிஜா (ஆசிரியை, கிளிநொச்சி) ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5/2, முதலியார் ஒழுங்கை,**
**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (53902)

தகவல்: நா.மோகனேஸ்வரன் (மைத்துனர்), திருமதி இ.மோகனேஸ்வரன் (சகோதரி)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு உதயகுமார்

சுழிபுரம், திருவடிநிலையைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு உதயகுமார் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு யோகாம்பரி தம்பதியரின் அன்பு மகனும் வளர்மதியின் (ஆசிரியர், வசாவிளான் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னையா-லீலாவதி தம்பதியரின் (ஊரெழு) அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூமாதேவி, கனகலிங்கம் (வட்டுக்கோட்டை, அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), செல்வம், சூரியகுமாரி (சுவிஸ்), நஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வரதராசா, நஞ்சிதா, கேதீஸ்வரன், புலேந்திரன், புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொத்தித்துரை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
அக்கினிஸ்ஸன் ரோட்,
வட்டுக்கோட்டை

தகவல்: **மனைவி, தாய், சகோதரர்கள்**

### திருமதி பேதுருப்பிள்ளை திரேசம்மா

திருமதி பேதுருப்பிள்ளை திரேசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியான் பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும், மத்தினா, பிரான்சிஸ் (இலங்கை வங்கி மேற்றுக் கிளை - யாழ்ப்பாணம்) சௌந்தரி, குலம், நதி, நந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் பேதுருப்பிள்ளை வேதநாயகத்தின் (இளைப்பாறிய தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்) சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.09.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 61/3, மவுன்கார்மேல் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **பே. பிரான்சிஸ்,** (மகன்).

இல. 61/3, மவுன்கார்மேல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

### கந்தையா இராசையா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா அவர்கள் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ரஞ்சித்குமார், அசோக்குமார் (செல்லக்கிளி), பிரதீப்குமார், பிரவீனா (கனடா), தீவானா, சௌனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலராஜி, சசிகரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவியாகாடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேச்சடி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்: **மனைவி.**

### சின்னத்துரை அருந்தவநாதன்

*(தலைவர், காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம், நீர்வேலி)*

நீர்வேலி வடக்கைச்சேர்ந்த சின்னத்துரை அருந்தவநாதன் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

வேலணை 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ்.செயலகத்தில் உதவித்திட்டமிடல் பணிப்பாளராகக் கடமை புரியும் திருமதி **ரஞ்சிதமலர் மோகனேஸ்வரன்** அவர்களின் அன்புச் சகோதரி செல்வி **நாகலிங்கம் ஈஸ்வரி (ஈஸ்)** அவர்கள் 23.09.2006 அன்று காலமானார்.

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

6ஆம் வட்டாரம்,
வேலணை.

- *நாவலர் சனசமூக நிலையம், வேலணை மேற்கு.*
- *கிராம அபிவிருத்திச் சங்கம். வேலணை தெற்கு.*
- *வேலணை தெற்கு, விவசாய சம்மேளனம்.*

## மரண அறிவித்தல்கள்

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

*(முகாமையாளர், இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - அண்மையில் மாவட்ட முகாமையாளராக பதவி உயர்வு பெற்றவர். )*



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் சிவராமலிங்கம் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம் (S.P.H.I) மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் சுமதியின் அன்புக் கணவரும் சிவாஜினி, கிருஷாந், விஜயசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கதிர்காமலிங்கம் மற்றும் தியாகலிங்கம், காலஞ்சென்ற கிருஷ்ணலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம் (இலங்கை வங்கி, பருத்தித்துறை), சீதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜயந்தி, புஷ்பகுமார், திலகராணி, ரதிதேவி, சுரேஷ்குமார் (Lanka Clear) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தும்பளை,**
**பருத்தித்துறை.** (53905)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

### இளையதம்பி செல்வநாயகம்

தொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வநாயகம் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற கந்தையா-பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் விக்னேஸ்வரன், ஸ்கந்தவரோதயன் (கணக்குப் பதிவாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), திருச்செல்வி, அருட்செல்வி (பிரதேச செயலகம், உடுவில்), குகனேசன் (யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), ஜெயச்செல்வி (ஆசிரியை, யா/பாலசுப்பிரமணிய மகா வித்தியாலயம், ஆனைக்கோட்டை), சிவனேசன் (நெதர்லாந்து) ஆகியோரின் தந்தையும் விஜயராணி, வசந்தமலர் சுப்பிரமணியம் (சுவிஸ்), திரிலோகநாதன், மாலினி, மகேந்திரன், பிரகாமி ஆகியோரின் மாமனும் சுவேதினி, பகவதி, இளமாறன், சுகிர்தா, பவித்திரா, சஞ்ஜீவன், பிரணவன், மணிவர்மன், பிரவீணா, மணிமோகன், பார்த்தீபன், நர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் விலங்கன் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**
**சுன்னாகம்.** (53904)

தகவல்: **செ.விக்னேஸ்வரன் (மகன்).**

### திருமதி ஆறுமுகம் சிவபாக்கியம் *(பத்தர்)*



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (24.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (C.T.B.) அன்பு மனைவியும், சபேசன், வரலட்சுமி (வசந்தி), ரேவதி, தியாகராஜன் (பொறியியலாளர், கண்டி) ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தி, அற்புதராஜா (கிப்பி) செல்வராஜா, கோகுலவாணி, ஆகியோரின் மாமியும், இராசையாப்பத்தர், சபாரத்தினப்பத்தர், அன்னபூரணம், யோகலட்சுமி ஆகியோரின் சகோதரியும், தர்ஷிகா, ஜெனித்தா, சர்மிலன், மதுஷா, பிரதீபன், சுபலதா, இந்துமதி, யமுனா, சர்மிளா, அனுஷா, தர்ஷிகன், ஹர்மினி, ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2006) திங்கட்கிழமை முற்பகல்11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீனாட்சி அம்மன் கோவில் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (53907)

தகவல்: கிப்பி (மருமகன்)
(கிப்பி நகைத் தொழிற்சாலை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலைக்கு முன்னுள்ள நடைபாதையை மக்கள் கஷ்டமின்றிப் பயன்படுத்த ஏற்பாடு

நல்லூர்,செப்.25

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள நடைபாதை, பாதசாரிகள் கஷ்டமின்றிச் செல்வதற்கேற்றவாறு புனரமைப்புச் செய்யப்படும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மக்கள் நடைபாதையால் இலகுவாகச் செல்வதற்கேற்றவாறு தடைகள் போட்டு நடைபாதையை அமைப்பதன் மூலம் நடைபாதைகளில் கடைகள் அமைக்க வசதி இல்லாது போகும். இதனால் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்படுவதைக் குறைக்கமுடியும்.

வைத்தியசாலைக்கு முன்னுள்ள நடைபாதைகளில் கடைகள் உள்ளமையால் பாதசாரிகள் வாகனங்கள் செல்லும் பாதையில் இறங்கி நடக்க நேரிடுகின்றது. இதனால் விபத்துகள் ஏற்படக் கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.

நடைபாதையை தடைகள் போட்டு உரியமுறையில் திருத்தியமைப்பதன் மூலம் விபத்துகள் நடைபெறுவதையும் தடுக்க முடியும்.

எரிபொருள் பிரச்சினை காரணமாக மாநகரசபையினரால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் விநியோகம் தடைப்படுமா என்ற கேள்விக்கு ஆணையாளர் பதிலளிக்கையில் தற்போது மின்சார விநியோகம் உள்ளமையால் அதற்கான சாத்தியங்கள் தற்போது மிகவும் குறைவாக உள்ளன. மின்சார விநியோகம் தடைப்படின் குடிதண்ணீர் விநியோகம் தடைப்படும் நிலைமை ஏற்படக் கூடும் - என்றார். (ப-111-203)



## பொலிஸ் நிலையங்களில் பட்டதாரிகளுக்குப் பதவி

யாழ்ப்பாணம்,செப்.25

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பொலிஸ் நிலையங்களில் மேலதிக நிர்வாக வேலைகளை மேற்கொள்ள பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக நூறு பட்டதாரிகள் பொலிஸ் நிலையம் ஒவ்வொன்றுக்கும் நிர்வாக தரத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் கலைமாணி மற்றும் முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே மேற்படி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ப-95)



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தலைமையிலான படை அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர். படை அதிகாரிகள் குழுவினை யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்று அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

# தீப்பெட்டிகளை சங்கக் கடைகள் மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யலாம்

## இவ்வாறு கூறுகிறார்கள் பொதுமக்கள்

நல்லூர்,செப்.25

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக தீப்பெட்டிகள் கிடைக்கக் கூடியதான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. பிரதான விற்பனை நிலையங்கள் உட்பட சிறிய வர்த்தக நிலையங்களிலும் தீப்பெட்டிக்கு முழுமையான தட்டுப்பாடு நிலவும் சமயம் நடைபாதைக் கடைகளில் தீப்பெட்டி ஒன்றை ரூபா 10 இற்கு வாங்கக் கூடியதாக இருப்பதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர். அதிகாரிகள் இது குறித்து கவனம் எடுப்பதுடன் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தீப்பெட்டிகளைத் தருவித்து ப.நோ.கூ. சங்கங்களினூடாக அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ப-111)

## இன்று நடக்கும் கலந்துரையாடல்

கல்வியங்காடு,செப்.25

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியிலிருந்து வவுனியா மாவட்டத்துக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. யாழ்.கல்விப் பணிமனையில் நடைபெற இருக்கும் இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-79)

## கூட்டுறவுச் சங்கக்கிளை உடைத்துத்திருட்டு

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்.பாடி 10ஆம் இலக்க கிளையிலும் திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஊரடங்கு அமுலில் இருந்த சமயம் இடம்பெற்றுள்ளது.

சங்கக் கிளையை உடைத்த திருடர்கள் அங்கு இருந்த பெறுமதி மிக்க பொருள்களை களவாடி சென்றிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-17)

# நெடுந்தீவுக்கு ஆள்களை ஏற்றிவந்த படகோட்டிகளுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்.செப்.25

மன்னாரிலிருந்து பயணிகளை படகுகள் மூலம் நெடுந்தீவிற்கு அழைத்து வந்த படகோட்டிகள் நால்வர் ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பேசாலை, மன்னாரைச்சேர்ந்த ஸ்ரெனி நிக்லஸ் அனுஸ்மன் டேவிட் பீரிஸ், நிக்கலஸ் விமலன் லோகு, சோமபாலன் நாகதீபன் மற்றும் வங்காலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஆகிய நால்வருமே எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 2 படகுகளில் ஆள்களை அழைத்துவந்த இவர்களை நெடுந்தீவு கடற்படையினர் கைதுசெய்து நெடுந்தீவு பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

நெடுந்தீவு பொலீஸார் படகோட்டிகள் நால்வரையும் ஊர்காவற்றுறைப் பதில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தினர். விசாரணையின் பின்னர் படகோட்டிகள் நால்வரையும் எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (202)

## செபமாலை அன்னை ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை,செப்.25

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தினமும் பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தில் திருட்டு நடைபெற்று நற்கருணைப்பேழை உடைக்கப்பட்டு நற்கருணை சிந்தப்பட்டதை அடுத்து மன்னிப்பு சாந்தி வழிபாடு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப-30)

## இடம்பெயர்ந்தோருக்கான சுகாதார சேவைகள்

கல்வியங்காடு,செப்.25

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண நிலையால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோருக்கு சுகாதார சேவைகளை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளை பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வாரத்தில் 3 தடவைகள் இடம்பெறும் சுகாதார சேவைகளின் போது சுகாதாரப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் நலன்புரி முகாம்களுக்குச்சென்று சுகாதார சேவைகள் சம்பந்தமான விவரங்களை சேகரித்து இடம்பெயர்ந்த மக்களின் குறைபாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-79)

## அரிசியின் விலை கிடுகிடுவென உயருகின்றது

நல்லூர்,செப்.25

அரிசியின் விலை நாளுக்கு நாள் கிடுகிடுவென உயருகின்றது. யாழ். நகரை அண்மித்த வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ அரிசி ரூபா 135 ஆக விற்பனையானது.

பத்து கிலோ கொண்ட சிறிய அரிசி மூடை 1,350 ரூபா விலைபோனது. இதே சமயம் தேங்காய் எண்ணெய்யின் விலையும் லீற்றர் ஒன்று ரூபா 245 இற்கு விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

தினசரி பொருள்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்வதால் பாவனையாளர்கள் தாம் பெரிதும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகக் கூறுகின்றனர். (111)

# அனலைதீவில் கிடைக்கும் கடல் உணவுகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லத் தடை

## உள்ளூர் மக்களின் தேவைகளையொட்டி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.25

அனலைதீவில் உள்ள பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக அங்கிருந்து மீன்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களை வெளியிடங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அங்கு கடமையில் உள்ள அரச உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை அனலைதீவு மக்கள் வரவேற்றுள்ளதாகவும் தற்சமயம் நல்லரக மீன் கிலோ ஒன்று ரூபா 140/- க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தமக்குத் தேவையான கடல் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது எனவும் அனலைதீவு மக்கள் தெரிவித்தனர்.

அனலைதீவில் இருந்து அங்கு பிடிக்கப்படும் மீன்வகைகள் முன்னர் விற்பனைக்காக ஊர்காவற்றுறை யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் அங்குள்ள மக்கள் தமக்குத் தேவையான மீன்களை வாங்க முடியாதிருந்ததாகவும் தமது பகுதியில் உள்ள மீனவர்களுக்கு அரசு உரிய நிவாரண உதவிகளை வழங்கும்போது மீனவர்கள் கிராமத்து மக்களுக்கு மீன்களை விற்பனை செய்யாமல் வருமானத்திற்காக மீன்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வது நியாயமற்றது எனவும் அண்மையில் அனலைதீவுக்கு விஜயம் செய்த யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே. கணேஷிடம் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ப-111)

## கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலி பகுதியில் உள்ள நாவலடி வீதி, அம்மன் வீதி, தபால் கட்டை வீதி மற்றும் பாற்பண்ணை பகுதிகளில் கட்டாக்காலிகளாக திரியும் நாய்களை அழிக்கும் பணி 25ஆம், 26ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்க்கிழமை) காலை 8 மணிமுதல் நல்லூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டிவைக்கும்படி கோரப்பட்டுள்ளனர். பொது இடங்களில் காணப்படும் எந்த நாயும் கட்டாக்காலி நாயாகக் கருதப்பட்டு அழிக்கப்படவுள்ளதாகவும் -

பொதுமக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் நல்லூர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (ப)

# மரவள்ளி மாவில் சுவையான உணவுப் பொருள் தயாரிக்கலாம்

எமது பிரதேசத்தில் தற்போது காணப்படுகின்ற கோதுமை மா தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மரவள்ளி மாவை பயன்படுத்துவோம். இதில் கிட்டத்தட்ட 35 வீதம் காபோகைதரேற்று காணப்படுகின்றது. விவசாயிகளிடம் இருந்து நேரடியாக மரவெள்ளிக்கிழங்கை கிலோ 12 - 15 ரூபாவிற்கும், சந்தையில் கிலோ 25 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மலிவாக கிடைக்கும் போது மரவள்ளி மாவை தயாரிக்கலாம்.

**மரவள்ளி மா தயாரிக்கும் முறை -**

மரவள்ளிக்கிழங்கின் தோலை உரித்து நீரில் சுத்தமாக கழுவிய பின் சிறுசிறு சீவல்களாக்கி 2 அல்லது 3 நாள்கள் வெயிலில் நன்றாகக் காயவைக்கவும். பின் தேவைக்கு ஏற்ப அளவு சீவலை உரலில் இடித்தோ அல்லது ஆலையில் கொடுத்து அரைத்தோ பயன்படுத்தலாம். ஒரு கிலோ கிழங்கில் இருந்து அண்ணளவாக 300 கிராம் மாவைப் பெறலாம்.

**மரவள்ளி மாவில் சுவாயான ரொட்டி தயாரித்தல் -**

**தேவையான பொருள்கள்:**

மரவள்ளி மா - 500 கிராம், வெங்காயம் - சிறிதளவு, மிளகாய் - சிறிதளவு, தேங்காய் துருவல் - சிறிதளவு, உப்பு - தேவையான அளவு, நீர் - தேவையான அளவு.

**செய்முறை**

ஒரு கோப்பையில் மரவள்ளி மாவை இட்டு தேங்காய் பூ, வெங்காயம், மிளகாய் என்பவற்றை சேர்த்து மாவுடன் கலக்கிய பின்னர் தேவையான உப்பு, நீர் ஊற்றி குழைத்து சாதாரணமாக ரொட்டி மாவின் பதத்திற்கு எடுக்கவேண்டும். பின் சிறு சிறு உருண்டைகளாக்கி அவற்றை இலையில் தட்டி எடுத்து, அடுப்பில் உள்ள கல்லில் வேகவைத்து எடுக்கவும். பின்னர் சுடச்சுட உண்டால் நல்ல சுவையாகவும் வாசனையாகவும் இருக்கும்.

திருமதி யோ.ஜமுகன்,
விவசாயப் போதனாசிரியர்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி. அலுவலகம், யாழ்ப்பாணம்.)

## ஆலய வீதியை முழுமையாக புனரமைக்கக் கோரிக்கை

மானிப்பாய்,செப்.25

நவாலி வடக்கு - பெத்தனாச்சிமார் வீதி வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் புனரமைப்பு செய்யப்படுகிறது.

கல் ஒழுங்கையில் இருந்து 100 மீற்றர் வரையிலான தார் வீதி மட்டுமே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதெனிலும் -

வீதியின் ஏனைய 1.5 கிலோமீற்றர் நீளமான பெத்தனாச்சிமார் ஆலயத்திற்குச் செல்லும் மேற்படி வீதி மீள் புனரமைப்புச் செய்யப்பட வில்லை.

மேற்படி வீதயை முழுமைபெறும் வகையில் மீள்புனரமைப்பு செய்து தருமாறு நவாலி வடக்கு பெத்தனாச்சிமார் ஆலய தர்மகத்தா சபை உறுப்பினர் ஜயாத்துரை உருத்திரகுமார் பிரதேச சபை செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இதேவேளை -

மேற்படி நவாலி வடக்கு பெத்தனாச்சிமார் ஆலய வீதிக்கு கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மின்சாரம் இன்றி உள்ளதாகவும் -

ஆலய தேவைகருதியும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியும் மின்சாரம் வழங்கி உதவுமாறு நவாலி ஹேமலதா செல்வராஜா ஞா.கா்ந்த ச.ச.நிலைய தலைவர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலனுக்கு கடிதம் எழுதியுள்ளார். (ப-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் இடமாற்றம்

தென்மராட்சி கிழக்கு,செப்.25

யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபராக கடமையாற்றிய கே. ஞானலிங்கம் பதவி உயர்வுபெற்று முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக நியமனம் பெற்றுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக கடமைபுரிந்த எஸ். ஜெபரட்ணம் யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக இடம்மாற்றம்பெற்று அண்மையில் கடமையை பொறுப்பேற்றுள்ளார். இதேவேளை, யாழ். பிரதம அஞ்சலக அதிபராக கே. சிவராசா நியமனம் பெற்றுள்ளார். கொடிகாமம் அஞ்சலக அதிபராக கே. யோகேஸ்வரன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். கொடிகாமம் அஞ்சல் அதிபராக கடமை புரிந்த எஸ். ஜெயசேகரம் அண்மையில் இளைப்பாறியதைத் தொடர்ந்து இந்நியமனம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-122)

# மத்தியஸ்த சபைக்கு தேவைப்படின் சட்ட ஆலோசனை

யாழ்ப்பாணம்,செப்.25

வலி.தென்மேற்கு பிரதேச மத்தியஸ்த சபைக்கு சட்ட ஆலோசனைகள் தேவைப்படின் அதற்கான உதவி வழங்கப்படும்.

மானிப்பாய் சட்டத் தரணியும் மல்லாகம் பதில் நீதிவானுமாகிய இ.வசந்தசேனன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மிக முக்கியமான சட்ட நுணுக்கம் கொண்ட வழக்குகள் பதிவாகி மத்தியஸ்தம் செய்யப்படுகின்றன.

இவ்வாறான வழக்கு தீர்விற்கு சட்டத் தரணிகளின் சட்ட ஆலோசனை தேவைப்பட்டதற்கிணங்கவே சட்டத்தரணி இ.வசந்தசேனன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது வலி.தென்மேற்கில் 28 கிராம அலுவலர் பிரிவிலும் உள்ள மக்களின் 40 இற்கும் மேற்பட்ட பிரச்சினைகள் தீர்விற்காக பதியப்பட்டு மத்தியஸ்தம் இடம்பெற்று வருகிறதாக தவிசாளர் கு.ஜெகநாதன் தெரிவித்துள்ளார். (ப-95)


## பாக்யா இசைப் பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு

02.10.2006 திங்கட்கிழமை விஜயதசமியாகிய நன்நாளில் இசை, இசைவாத்திய வகுப்புகள் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

- மிருதங்கம்
- வயலின்
- ஓகன்
- புல்லாங்குழல்
- வாய்ப்பாட்டும், பண்ணிசையும்.

இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு: பாக்யா காகிதாதிகள்

121, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில்.

(53751)


## ஆறாம் ஆண்டின் நினைவலைகள்



தோற்றம் 20 ★ 10 ★ 1954

மறைவு 30 ★ 09 ★ 2000

### அமரர் சுந்தரம் யோகானந்தா

திதி: பூர்வத் திருதியை

ஆறு ஆண்டு சென்றிடினும்
ஆறவியல்லை எம் மனது
ஆண்டவனின் பாதக் கமலத்தில்
அப்பா உமது ஆத்மா சாந்தி அடையட்டும்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (53897) மனைவி, பிள்ளைகள்.

## சேவை நலன் பாராட்டு



19.09.2006இல் அகவை 60ஐப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை தென்னை வளம்)

### உயர்திரு. சி.ஐயாத்துரை

அவர்கள்

எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு தானே உறு துணையாக நின்று கூட்டுறவு என்ற பதத்திற்கு இலக்கணமாக விளங்கிய அவரின் சேவையினைப் பாராட்டி, மேலும் அவர் பல செல்வங்களைப்பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

சங்கானை ப.தெ.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
பிரதான வீதி, சங்கானை.


## லயம் நுண்கலை பயிலகம்

[வண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக]

### மிருதங்க வகுப்புகள்

புதிய மிருதங்க வகுப்புகள் 02.10.2006 திங்கட்கிழமை விஜய தசமி அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

620, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

ஒரு சைக்கிள், இரண்டு கட்டில், இரண்டு மேசை, LML ஸ்கூட்டர் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
சம்பியன் லேன், சைக்கிள் கடை,
கொக்குவில் கிழக்கு.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியில் வசிக்கும் திரு. திருமதி சேனாதிராசா - ஜெயறஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி கஜனி தனது முதலாவது பிறந்த நாளை இன்று (25.09.2006) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி கஜனிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார் பெரியப்பா - பெரியம்மா, சித்திமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், நண்பர்கள் அனைவரும் அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அப்பா - அம்மா.

சே.கஜனி

25 ★ 09 ★ 2006

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

# கட்டைவேலி - நெல்லியடி கிளைகளில் நிவாரணம்

தென்மராட்சி கிழக்கு,செப்.25

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் தற்சமயம் கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சார்பான வவுச்சர்கள் அந்த அந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது சார்பான விவரப் பட்டியலை அந்த அந்த கிளைகளில் பார்வையிடலாம்எனகூறப்பட்டுள்ளது. (ப - 122)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

816 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

23 25 30 33

விருச்சிகம்

22-09-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5428595 - 5444897

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 357,343 | 10/- | 3,573,430/- |
| 2 இலக்கங்கள் | 32,869 | 20/- | 657,380/- |
| 1 இல. + லக்கினம் | 32,392 | 30/- | 971,760/- |
| 2 இல. + லக்கினம் | 2,977 | 100/- | 297,700/- |
| 3 இலக்கங்கள் | 884 | 500/- | 442,000/- |
| 3 இல. + லக்கினம் | 81 | 5,000/- | 405,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | - | | 6,847,270/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 426,556 | | 7,870,770/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,798,200/-

தொடர் இல.4550582 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 செப்டம்பர் 26 ஆம் திகதி செல்லாதாக்கப்படுவதோடு சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குத் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 5430468-4-65 |
| ஹம்பாந்தோட்டை | 5441838-5-58 |
| காலி | 5431629-8-10 |
| குருநாகல் | 5430089-9-68 |
| திருகோணமலை | 5434585-9-24 |


## நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 14 = 07 = 1938 உதிர்வு 26 = 08 = 2006

### வல்லி - சின்னராசா

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)



மலர்வு 16 = 09 = 1971 உதிர்வு 25 = 08 = 2006

### சின்னராசா - இரத்தினசிங்கம்

(முன்னாள் முகாமையாளர், நல்லூர்.ப.நோ.கூ.ச.)

தில்லையம்பதியினில் வந்துதித்த நன்முத்துகள் நீங்கள்
மின்னாமல், முழங்காமல் வந்த மழைபோல்
தீராத நோய்வந்து உங்களை காவு கொண்டதேனோ...?
எண்ணத்தில் ஏக்கங்களோடும் என்றும் அறியாத் துயரங்களோடும்
எமக்காய் வாழ்ந்த எங்கள் அன்புச் செல்வங்களே...!
உங்கள் திருவதனம் காணாது தவியாய்த் தவிக்கின்றோம்.

கடந்த 25-26/08/2006 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வங்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.09.2006) அவர்களது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தில்லையம்பதி, கோண்டாவில். (53857) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராஜசுந்தரம் இரவி



நுணாவிலைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசுந்தரம் இரவி சுவிற்ஸர்லாந்தில் 19.09.2006 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசுந்தரம் மற்றும் சவுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயம்) தம்பதியரின் அன்பு மகனும் கனகரட்ணம் (C.T.B) - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சுயாதாவின் அன்புக் கணவரும் வினுஜன், தனுஜன் ஆகியோரின் தகப்பனும் காலஞ்சென்றவர்களான கீதா, யசோதரன், சிவகரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2006 புதன்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.புவிகரன் (இ.போ.ச)
மைத்துனர்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே. 0041313815523 (சுவிஸ்)

(53889)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தரைப் பாதையைத் திறப்பதன் மூலம் அமைதி முயற்சிக்கும் வழி திறக்கலாம்

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' - என்பார்கள். யாழ். குடா நாட்டு மக்களின் இன்றைய அனுபவமும் அதுதான்.

யாழ்.குடாநாட்டுக்கான தரை வழிப்பாதை தடைப்பட்டு ஒன்றரை மாதங்களாகிவிட்டது. அங்கு அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது.

குடாநாட்டுக்குத் தேவையான மூன்று மாத உணவுப் பொருள்கள் அங்கு அனுப்பப்பட்டு விட்டன என்கின்றது அரசு.

ஆனால், மூன்று வார காலத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தை வந்தடைந்திருக்கின்றன என்கின்றார் யாழ். அரச அதிபர்.

*''யாழ். குடாநாட்டுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோக நடவடிக்கை அரசின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது. நிலைமை கையை மீறிப் போகவில்லை. எனவே, ஆரவாரப்படவோ, அச்சப்படவோ எந்தக் காரணமுமில்லை.*

*''நாட்டில் போதுமான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன. எனவே, எங்கும் உணவின்மை என்ற மனிதாபிமானப் பிரச்சினையை நாடு எதிர்கொள்ளவில்லை. அப்படி நெருக்கடி உள்ளது என யாரும் முறைப்பாடு செய்யவுமில்லை. ஐ.நா. முகவர் அமைப்புகள் சில மட்டும் அப்படித் தகவல் வெளியிடுகின்றன. ஒன்றுக்கும் உதவாக் குப்பைத் தகவல்கள் அவை. அரசை விமர்சிப்பதைத் தவிர அவர்கள் வேறு எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை.''* - என்று சீறுகின்றார் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.டி. திவாரத்ன.

ஆனால், அகதிகளுக்கான ஐ.நா. தூதரின் தகவலோ இதற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றது.

*''விநியோகங்கள் முடங்கி விட்டன. குடாநாட்டைப் பெரும் சிக்கல்கள் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. தற்போதைய நிலைமையில் அறுபதாயிரம் பேர் தத்தமது இடங்களிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். அவர்களில் அரைவாசிப்பேர் சிறுவர்கள். மின்சாரமின்மை, குடி தண்ணீர் இன்மையால் பெரும் ஆபத்து உருவாகும் நிலைமை. கட்டுமான நடவடிக்கைகள் முடங்கி விட்டன. வன்முறை அதிகரிப்பால் வீதிகள் முடக்கப்பட்டு விட்டன. எரிபொருள் இல்லாததாலும் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு. இதனால், பொருள் விநியோகமும் சீர்குலைவு.*

*''குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களில் அரைவாசியே கடந்த மாதம் வந்து சேர்ந்துள்ளது.*

*''இடப்பெயர்வாலும், பொருள் பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பு என்பனவற்றாலும் அன்றாடம் உழைத்து உண்ணும் கூலித் தொழிலாளர் குடும்பங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.''* - என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கூறுகின்றது.

அங்கு அகதிகளுக்கு விநியோகிக்க அரிசிக்குக் கூட பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் இதைத்தான் தெரிவிக்கின்றனர்.

*''யாழ். குடாநாடு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக உள்ளது. மக்கள் பணயக் கைதிகள் போல நடத்தப்படுகின்றார்கள். உணவுத் தட்டுப்பாடு காரணமாக சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் கூட்டறவுக் கடைகளிலும், பேக்கரிகளின் முன்னாலும் அன்றாட வயிற்றுப்பாட்டுக்காகப் பாண் வாங்கவும், அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யவும் வரிசையில் காத்து நிற்கின்றார்கள்.''* - என்ற அதிர்ச்சித் தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவ்விவகாரம் தொடர்பாக விசேட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கும் யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, குடாநாட்டில் தனியார் கடைகள், வர்த்தக நிலையங்கள் எல்லாம், பொருள் கையிருப்பு முடிவடைந்து காலியாகி விட்டன என்ற உண்மையைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

யாழ். குடாநாட்டுக்கான - முகமாலை ஊடான - 'ஏ-9' தரை வழிப்பாதையைத் திறப்பதில்லை என்பதில் பிடிவாதம் காட்டும் அரசுத் தரப்பு, யாழ். குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை கடல் வழியாக - கப்பல்கள் மூலம் - நிறைவு செய்யலாம் என உறுதியாகக் கூறுகிறது; அடித்து-அழுத்தி - தெரிவிக்கின்றது.

ஆனால், யதார்த்த நிலைமை அதுவல்ல என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இனிக் கடற்கொந்தளிப்புக் காலம். அடுத்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு வடக்கு - கிழக்குக் கடல் பாதை ஊடாகப் பொருள்களைக் குடாநாட்டுக்கு எடுத்துச் செல்வதோ, இறக்குவதோ மிகவும் நெருக்கடியாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும், வட பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லும் கப்பல்களுக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணை உதவியைப் பெறும் எத்தனமும் பயன்தரவில்லை. இதன் காரணமாக அத்தகைய கப்பல் சேவைகளுக்குத் தங்களால் வழித்துணை உதவி வழங்க முடியாது என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கைவிரித்து விட்டது.

இவ்விவகாரத்தில், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் ஒத்துப்போக மறுத்தமைக்காக - மனிதாபிமானப் பணிக்கான பொருள்களைக் கப்பல் மூலம் வடக்கே எடுத்துச் செல்லும் முயற்சி தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வழித்துணைக்கு இணங்க மறுத்தமைக்காக - சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை, கடந்த வெள்ளியன்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய சமயம் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், சர்வதேச சமூகத்தின் சார்பில் புலிகளுக்குத் தெரியப்படுத்தினார் என்றும் கூறப்படுகின்றது.

எது, எப்படியோ, குடாநாட்டில் பற்றாக்குறையும், நெருக்கடியும், அமைதி வாழ்வு சீர்குலைவும் மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றன என்பதே உண்மை.

அப்படி நெருக்கடி ஏதும் இல்லை என்ற சாரப்பட விடப்படும் பத்திரிகை அறிக்கைகளும், அறிவிப்புகளும் பயன்தரப் போவதில்லை. மெருகூட்டப்பட்ட சொற்றொடர்கள் செயல் வடிவம் பெற்று எழுந்து பிரச்சினைத் தீர்வுக்கு உதவமாட்டா. அதை அதிகாரிகள் உணர்ந்துகொள்வது நல்லது.

'ஏ-9' வீதியூடான தரைவழிப் போக்குவரத்தை மீண்டும் திறப்பதன் மூலம் குடாநாட்டு மக்களின் மோசமான நெருக்கடியைத் தீர்ப்பது மட்டுமல்லாமல், அந்த அரசியல் நகர்வின் மூலம் அமைதிப் பேச்சு மீண்டும் அரும்ப வழி செய்யவும் முடியும். சம்பந்தப்பட்டோரின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

# மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர அரசும், படையினரும் வழிவிடவேண்டும்

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கோரிக்கை

கொழும்பு செப்.25

குடாநாட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கை தொடர அரசும், படையினரும் வழிவிட வேண்டும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''குடாநாட்டிலுள்ள மாணவர்களின் கல்வியின் எதிர்காலம் என்ன''? என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேற்று அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

யாழ்.குடாநாட்டிலுள்ள பல்கலைக் கழகம், உயர் தொழிநுட்ப நிறுவனம், கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரி, கல்வியியற் கல்லூரி மற்றும் 300 இற்கும் அதிகமான பாடசாலைகளும் கடந்த ஒன்றரை மாதங்களாக மூடப்பட்டுள்ளன. இந்நிலை ஏற்படுத்தப்பட்டதற்கான முழுப் பொறுப்பினையும் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளே ஏற்கவேண்டும்.

மாணவர்கள் நிம்மதியும், சுதந்திரமும், அமைதியுமாகக் கல்வி கற்பதற்குமான சூழல் முற்றாக சீரழிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு 'உண்ண உணவில்லை' 'உடைகள் துவைக்க சவர்க்காரமில்லை' 'பாடசாலையில் அல்லது தனியார் நிலையங்களில் கற்பிக்கப்படும் பாடங்களை மீளவும் இரவில், அல்லது அதிகாலையில் மீட்டுப்பார்ப்பதற்கு வீட்டில் விளக்குமில்லை' 'மின்சாரமுமில்லை'.

பல்கலைக்கழக மாணவர்கள், தொழிநுட்பக் கல்லூரி மாணவர்கள், காவலாளிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தினமும் மாணவர்கள், ஆசிரியர்கள், கடத்தப்பட்டு, கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு அது தொடர்பாக யாருக்கும் முறையிடக்கூடாதென மிரட்டப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். மரண பயத்தோடு வாழும் மாணவர்களும் ஆசிரியர்களும் வீடுகளிலிருந்து மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் வெளியே செல்கின்றபோதுகூட தமது உயிரைக் கையில் பிடித்தபடியே செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையை உருவாக்கிய படையினர் குடாநாட்டிலுள்ள மக்களையும், மாணவர்களையும் முட்டாள்களென நினைத்துக்கொண்டு ஓர் அறிக்கையினை விடுத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் எதிர்பார்த்தபடி மக்களுடைய அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சுமூக சூழல் தோன்றியுள்ளதாகவும், மாணவர்கள் பாடசாலைகளுக்குச்சென்று கல்வி நடவடிக்கைகளை தொடரவேண்டும் என்ற வகையிலும் அவர்களது அறிக்கை அமைந்துள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு உண்மைகளை மூடிமறைத்து அவர்களை தவறாக வழி நடத்தும் நோக்கில் பொய்யான அறிக்கை ஒன்றை படையினர் வெளியிட்டுள்ளமைக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மிக வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் ஒருபோதும் தற்போது படையினரால் உருவாக்கப்பட்டுள்ள சூழலை விரும்பவில்லை.

### எதற்கும் வரிசையில் நிற்கவேண்டிய நிலையில் குடாநாட்டு மக்கள்

ஏ-9 வீதியை மூடியுள்ள படையினர் மக்களை அடிமைகளாக நடத்துகின்றனர். மக்கள் தமது எந்தவொரு தேவைக்காகவும் படையினரின் முன் மண்டியிட்டு நின்று அவர்களிடம் கெஞ்சியே எந்தவொரு தேவையையும் நிறைவேற்ற வேண்டுமென படைகள் விரும்புகின்றன. உணவுத் தட்டுப்பாடு காரணமாக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு பேக்கரிகளுக்கு முன்னாலும், ப.நோ.கூ.சங்கத்திற்கு முன்னாலும் பாணுக்காகவும், அரிசி, மா, சீனி, சவர்க்காரம் என்பவற்றுக்காகவும் காலை முதல் மாலை வரை வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.

இரவில் வீடுகளில் ஒளியேற்றுவதற்கு ஒரு மெழுகுதிரி கூடஇல்லாத நிலையில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இருளில் மூழ்கியுள்ளன. தெல்லிப்பளை யூனியன் கல்லூரி படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. பல பாடசாலைகள் இராணுவ வலயங்களாக்கப்பட்டுள்ளன.

மீன்பிடித்தடை காரணமாக தொழிலை இழந்த கடற்றொழிலாளர்களும், தென்மராட்சி, வலிகாமம் உள்ளிட்ட குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அகதிகளாக்கப்பட்டவர்களும் ஒரு ரூபா வருமானம்கூட இல்லாத நிலையில் நிவாரணத்தையும் சரியாகப் பெறமுடியாத நிலையில் பட்டினி கிடக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்கள் தமது பொருளாதார முன்னேற்றம் பற்றியும், தமது பிள்ளைகளின் கல்வியைப் பற்றியும் சிந்திக்க வேண்டியநேரத்தில் யார் இன்று கொல்லப்படுவோம், யார் இன்று கடத்தப்படுவோம், அதிலிருந்து எப்படித் தப்புவது, எப்படி தமது பிள்ளைகளைக் காப்பாற்றுவது என்று ஏங்கும் நிலை காணப்படுகின்றது.

மாணவிகளோ, ஆசிரியைகளோ வீதியில் செல்வதில் எவ்வித பாதுகாப்பும் இல்லாத நிலையில் எவ்வாறு பாடசாலைக்குச் செல்லமுடியும்?

இலங்கையில் 13 பல்கலைக்கழகங்கள் உள்ள போதிலும், தமிழ் பிரதேசங்களில் இரண்டு பல்கலைக்கழகங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றினையும் மூடுவதன்மூலம் தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்க அரசு முயல்கின்றது. அந்த நோக்கிலேயே பல்கலைக்கழக மாணவர்களைச் சுட்டுக்கொன்றது மட்டுமன்றி மாணவர் ஒன்றியத் தலைவரையும் கைதுசெய்து அவர் மீது பொய்க் குற்றம் சுமத்தி தடுத்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாக அச்சமடைந்த மாணவர்கள் அச்சம் காரணமாக தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி வீடுகளில் முடங்கியுள்ளனர். இந்நிலை தொடர்பாக கல்வி அமைச்சிற்கும் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் பல கடிதங்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

உண்மையான ஓர் இயல்புநிலையை ஏற்படுத்துவதனை விடுத்து, பொய்யான அறிக்கைகளை விடுத்து, கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை மிரட்டி பாடசாலைகளை நடத்த முயல்வதன் மூலம் குடாநாட்டில் இயல்பு நிலை இருப்பதாகக் காட்ட அரசும் படைகளும் துடியாய்த் துடிக்கின்றன.

கெடுபிடிகள், ஆள்கடத்தல்கள், படுகொலைகள் என்பன பூரணமாக நிறுத்தப்படும்வரை அதற்கெதிராக நடைபெறும் சாத்தியமான போராட்டங்கள் தொடர்ந்தே செல்லும். அதன் மூலம், மக்களின் விருப்பங்களுக்கு மாறாக குடாநாட்டு மக்களை படையினர் திறந்த வெளிச் சிறைச்சாலையில் அடிமைகளாக நடத்துகின்றனர் என்பதனை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தவும், அக்கொடுமைகளிலிருந்து விடுபடவும் முடியும்.

அதேவேளை - குடாநாட்டிலுள்ள மாணவர்களின் கல்வியை தமது அரசியல் நோக்கங்களுக்காக தொடர்ந்தும் சீரழிப்பதனை படையினரும் அரசும் உடன் நிறுத்தவேண்டும். சர்வதேச சிறுவர் உரிமைச் சட்டங்களை மதித்து கடந்த 42 நாள்களாக கல்வியை இழந்து நிற்கும் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களினதும், பல்கலைக்கழகம் உள்ளிட்டவற்றில் பயிலும் பத்தாயிரத்துக்கும் அதிகமான உயர் கல்வி மாணவர்களினதும், கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வழி விடவேண்டும்.- என்று உள்ளது.

# பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கென வர்த்தகர்களுக்கு 600 மெ.தொன் கோதுமை மா

## யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.25

குடாநாட்டில் உள்ள மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் அவர்களின் அவசரதேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியாக 600 மெற்றிக்தொன் கோதுமை மா தனியார் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.அரசஅதிபர் கே.கணேஸ் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு தற்சமயம் விநியோகிக்கப்படும் கோதுமை மாவுக்கு புறம்பாக தனியார் மூலம் மா விற்பனை செய்யப்படுகின்றது என்றும் -

கிராமப்புற மக்களுக்கு இந்த கோதுமை மா கிடைக்க வர்த்தகர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும் - அரச அதிபர் கேட்டுள்ளார்.

தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வர்த்தகர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும் - அரச அதிபர் வேண்டியுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் :-

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது நிவாரணம் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், சமுர்த்திக் குடும்பங்கள், உயர் வருமானம் பெறும் குடும்பங்களுக்குப் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக அரிசி, கோதுமைமா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. ப.நோ.கூ.சங்கங்கள் இவ்விநியோகத்தை மேற்கொள்வதில் பாரிய வேலைப்பளுவை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

எனவே பொதுமக்களின் நலன்கருதித் தற்பொழுது பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து இறக்கப்படுகின்ற கோதுமை மாவை முதலாவதாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல உணவகங்களுக்கான குறுகிய காலத் தேவைக்கும், யாழ்.மாவட்டத்தில் வதியும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 கிலோ வீதமும் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு இன்று திங்கட்கிழமையில் இருந்து அமுலாக்கப்படும்.

இவ்விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு யாழ்.வணிகர் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விநியோகம் சம்பந்தமாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் சம்பந்தமாக மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஏனைய யாழ். மாவட்டத்தில் இயங்கும் வர்த்தக சங்கங்கள், வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது பிரதேசத்திற்கான மாவைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். அத்தோடு மாவைக் கொள்வனவு செய்யும் பொதுமக்களும் தத்தமது உடனடித்தேவைக்கு ஏற்ற அளவில் மாத்திரம் கொள்வனவை மேற்கொள்ளுமாறும் அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இந்த விநியோகத்தில் சகல வர்த்தகர்களும், பொதுமக்களுடன் தங்களுடைய பரிபூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், ஒரு கிலோ மாவின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூ.40/= எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன். - என்றும் அதில் உள்ளது. (ப)

# படையினர் - புலிகள் நேற்று மட்டு. வவுணதீவில் மோதல்!

மட்டக்களப்பு - வவுணதீவுப் பகுதியில் நேற்றுக் காலை 5.45 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளே இராணுவத்தினர் மீது முதலில் தாக்குதல் நடத்தினர் என்றும், அதனையடுத்தே படையினர் புலிகளின் நிலைகளைத் தாக்கினர் எனவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

எனினும், படையினரே தமது பகுதி மீது வலிந்த தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று புலிகள் குற்றஞ்சாட்டினர்.

இதன்போது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான புலிபாய்ந்தகல், கிரான், தரவைக்குளம் ஆகிய பகுதிகள் மீதும் படையினர் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களை நடத்தினர். இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் டீசல் போதாதாம்!

## அதிகரித்து வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.25

குடாநாட்டில் உள்ள தொண்டு நிறுவனங்களின் வாகனங்களுக்கு விநியோகிக்கப்படும் டீசல் போதாமையாக இருப்பதாக தொண்டு நிறுவனப்பிரதிநிதிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் அட்டைகளுக்கு வாரத்தில் மட்டுப்படுத்தபட்ட அளவில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான பணிகளை, வாகனம் மூலம் சென்று மேற்கொள்வதற்கு விநியோகிக்கப்படும், டீசல் போதாமல் இருப்பதாகவும் -

எனவே மக்களுக்கு சேவை செய்யும் தொண்டு நிறுவனங்களின் வாகனங்களுக்கு வாரத்தில் விநியோகிக்கப்படும் டீசலின் அளவை அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (17)

## எள்ளங்குளம் மாவீரர் துயிலும்.இல்லம் மீண்டும் சேதப்படுத்தப்பட்டது

உடுப்பிட்டி,செப். 25

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் நேற்றுமுன்தினம் மீண்டும் சேதமாக்கப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லத்தினை அழகுபடுத்தும் வகையில் நிறுவப்பட்டிருந்த பூச்சாடிகள், கதவுகள், தீபம் ஏற்றும் மேடையில் உள்ள குவளை என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி மாவீரர் துயிலும் இல்லம் கடந்த மாதமும் சேதப்படுத்தப்பட்டமை தெரிந்ததே. (155)

## தம்பசிட்டியில் கிரனேட் வீச்சு சிப்பாய் ஒருவர் காயம்!

உடுப்பிட்டி, செப்.25

பருத்தித்துறை தம்பசிட்டி சதாவதானி சனசமூக நிலைய வீதியூடாக ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த சிப்பாய் படையினரின் அம்புலன்ஸில் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (155)

## பழம்பெரும் நடிகை பத்மினி காலமானார்



சென்னை, செப் 25

பழம்பெரும் திரையுலக நடிகை பத்மினி நேற்றிரவு மாரடைப்பினால் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 74.

பரதநாட்டியம் உட்பட அனைத்து வகையான நடனங்களையும் முறைப்படி கற்ற பத்மினி தனது நடனத் திறமையினால் திரையுலக ரசிகர்களால் 'நாட்டியப் பேரொளி' என அழைக்கப்பட்டார்.

தில்லானா மோகனாம்பாள், திருவருட் செல்வன், குருதட்சணை, மணமகள், ஆதி பராசக்தி, வியட்நாம் வீடு, வஞ்சிக்கோட்டை வாலிபன், பூவே பூச்சூட வா, உள்ளிட்ட பல வெற்றிப்படங்களில் இவர் நடித்துள்ளார்.

## பத்மநாதன் எம்.பியின் மெய்க்காவலர் விநாயகபுரத்தில் நேற்று சுட்டுக்கொலை!

கொழும்பு, செப். 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. பத்மநாதனின் மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் நேற்றுக் காலை 10.40 மணியளவில் அக்கரைப்பற்று - விநாயகபுரத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான தங்கராஜா குகேந்திரன் (வயது-38) என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று - விநாயகபுரம் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காகக்காத்திருந்த வேளையிலேயே இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இவர் கொல்லப்பட்டார். இவரது சடலம் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)

## மிதிவெடியில் சிக்கி படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 25

உரும்பிராய்ப் பகுதியில் தேங்காய் பிடுங்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். ச.மகின்சன் (வயது 13) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (15-78-203)

## புற்றுநோய் பாதித்த சிறாருக்கு உதவிப்பொருள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.25

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 15 சிறார்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணி முதல் யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோயாளர் பிரிவில் (26 ஆம் வாட்) நடைபெறவுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புற்றுநோய் சிகிச்சை நிபுணர் என்.ஜெயக்குமார் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (202)

## பேச்சிற்கு அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் பேசியிருக்கிறோம்.

★ **கேள்வி:** அரசைப் பொறுத்தவரை அவர்கள் உங்களுடைய தலைமையிடம் இருந்து ஒரு உத்தரவாதத்தை எதிர்பார்க்கிறார்கள். அந்த உத்தரவாதத்தை வழங்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

★ **இளந்திரையன்:** அவர்கள் பலவிதமான நிபந்தனைகளை மாறி மாறி சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதுகூட எவ்வளவு தூரம் அவர்களுடைய நிபந்தனையாக இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இதுபற்றி நோர்வேத் தரப்பும் எங்களிடம் நேரடியாகத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. இவ்வாறான ஒரு நிபந்தனையை அவர்கள் முன் வைப்பார்களாக இருந்தால் அதுபற்றி நோர்வேத் தரப்புடன் நாங்கள் மீண்டும் பேசவேண்டி இருக்கும்.

★ **கேள்வி:** இது ஒரு நிபந்தனை என்று நீங்கள் கூறுகிறீர்கள். அரசுத் தரப்பைப் பொறுத்தவரை நம்பகத் தன்மையின் அடிப்படையிலேயே இப்படி ஒன்றைக் கேட்கிறோம் என்கிறார்கள்....

★ **இளந்திரையன்:** பெப்ரவரிமாதம் நடந்த ஜெனிவாப் பேச்சுகளில் அவர்கள் எங்களுக்குத் தந்த எந்த வாக்குறுதியை நிறைவேற்றினார்கள்? அந்த இடத்திலிருந்து அல்லவா நம்பகத்தன்மை தொடங்கவேண்டும்?

★ **கேள்வி:** அரசு கேட்டபடி உங்கள் அமைப்பின் தலைமையிடமிருந்து அப்படியொரு உறுதிமொழி வர வாய்ப்பிருக்கிறதா?

★ **இளந்திரையன்:** உத்தியோகபூர்வமாக அப்படி ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டால் அது பற்றி எங்களது தலைமை முடிவுசெய்யும்.(ஐ-12)

## திருமலையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாமல் வவுனியாவில் தங்கியிருந்தனர். இவர்களில் ஆயிரம் பேர் இன்றுகாலை வவுனியாவிலிருந்து 20 பஸ்களில் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் நிறுவனங்கள் வெற்றுக் கூச்சல்தான் போட்டுவருகின்றனர் என்பது வெளிப்படையானது. அரசை விமர்சனம் செய்வதை விட வேறு எதனையும் அவர்கள் செய்தது இல்லை. யாழ்ப்பாணத்துக்கு மொத்தம் 9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. ஐ.நா. நிறுவனங்கள் கூறுகின்ற கருத்துக்களில் எந்த உண்மையும் கிடையாது - என்றார். (த)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமரசிங்க தெரிவித்தார்.

மனிதநேய அடிப்படையிலேயே இந்த நோயாளிகளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்று இராணுவம் கொழும்புக்கு அழைத்துச் சென்றது என்றும் பிரசாத் சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

இந்நோயாளிகளுடன் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் சிலரும் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-12)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் மீள ஒரு யுத்தம் வெடிக்காமல் தவிர்ப்பதற்காக நோர்வே அனுசரணைத் தரப்பு எடுத்திருக்கும் முயற்சிகளுக்கான அமெரிக்காவின் பலமான ஆதரவை இந்தச் சந்திப்பின் போது கொண்டலிஸா ரைஸ் அம்மையார், இலங்கை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நேரடியாகத் தெரியப்படுத்தினார்.

''இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மற்றொரு சுற்று அமைதிப் பேச்சை ஆரம்பிப்பதற்கு நோர்வே முயற்சி எடுத்திருக்கும் நிலையில் அந்த விடயத்தில் அதிக கவனத்தையும், உறுதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை கொண்டலிஸா ரைஸ் அம்மையார் வற்புறுத்தினார்.'' - என்று பெயர் குறிப்பிட விரும்பாத மேற்படி மூத்த அமெரிக்க அதிகாரி தகவல் வெளியிட்டார். (உ)

## 'பேச்சுக்கு வரத் தயார் என்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உத்தேச பேச்சு, வடக்கு - கிழக்கில் இடம்பெறும் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், ஜே.வி.பி. போன்ற கடும்போக்குக் கட்சிகளின் நிலைப்பாடு, மூதூர் நிவாரணப் பணியாளர்களின் படுகொலை போன்ற விடயங்கள் தொடர்பாக இந்த செவ்வியில் ஜனாதிபதியிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

★ **கேள்வி:** இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சு நடைபெறும் என்று நோர்வேத் தரப்பு அறிவித்துள்ளது. இந்தச்பேச்சுக்குச் செல்வதற்கு உங்கள் தரப்பில் முன் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளனவா?

★ **ஜனாதிபதி:** முன்நிபந்தனைகள் என்று குறிப்பாக எதுவும் கிடையாது. ஆனால், எங்களுக்கு உறுதிமொழி வேண்டும். சென்ற தடவை நாங்கள் ஒஸ்லோ சென்றிருந்தபோது விடுதலைப் புலிகளின் தமிழ்ச்செல்வனும் ஏனையவர்களும் பேச்சுக்குத் தயார் என்றுதான் சொன்னார்கள்; அங்கு சென்றார்கள். ஆனால், நான் என்னுடைய குழுவை அங்கு அனுப்பிய பிறகு ''இல்லை, இல்லை இலங்கை அரச குழுவுடன் பேச முடியாது'' என்று அவர்கள் கூறிவிட்டார்கள். இதுபோல மீண்டும் நடக்கக் கூடாது. பேச்சுக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தெளிவான உறுதிமொழிகள் வரவேண்டும். அதுவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் இருந்து தான் வரவேண்டும். அதைப் பிரபாகரன்தான் கூறவேண்டும். அரசு பேச்சுக்குத் தயார்.

### புதிய களநிலைமை

★ **கேள்வி:** தற்போது உள்ள போர் நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்புகளுமே தத்தமது எல்லைகளில்தான் இருக்கவேண்டும். ஆனால், தற்போது நீங்கள் பேசப்போவது ஒரு புதிய கள நிலைமையில். எனவே, புதிதாக போர்நிறுத்த ஒப்பந்தம் ஏதேனும் குறித்துப் பேசப் போகிறீர்களா?

★ **ஜனாதிபதி:** எல்லைகளா என்ன அது?.... இலங்கையில் அப்படித் தனித்தனியான எல்லைகள் எதுவும் கிடையாது. இலங்கைக்கு ஒரே எல்லைதான். பேச்சுவார்த்தை சம்பந்தமாகச் சொல்லவேண்டுமானால் அவர்கள் என்ன பேச விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. முதலில் இந்தக் கொலைகள், உயிரிழப்புகள் எல்லாம் நிறுத்தப்படவேண்டும். பிறகு ஏனைய விடயங்களைப் பற்றிப் பேசலாம்.

ஏனென்றால், நான் ஒரு அரசியல் தீர்வைக் கொடுக்கப்போகிறேன். இதுதொடர்பாக அனைத்துக் கட்சிக்குழு ஒன்றை ஏற்கனவே அமைத்துவிட்டேன். இந்தக் குழுவினருக்கு உதவுவதற்காக நிபுணர்களையும் நான் நியமித்துள்ளேன். எனவே, அக்குழுவினர் சில பிரேரணைகளை, யோசனைகளை முன் வைக்கலாம். அதைப் பின்னர் நாங்கள் விடுதலைப் புலிகளிடம் கொடுப்போம்; மக்களிடமும் கொடுப்போம்.

### அரசியல் தீர்வு

★ **கேள்வி:** சரி... நீங்கள் என்ன விதமான அரசியல் தீர்வை முன்வைக்க இருக்கிறீர்கள் என்பது பற்றி மேலும் கூறமுடியுமா?

★ **ஜனாதிபதி:** என்னைப் பொறுத்தவரை எந்த ஒரு தீர்வும் ஒரு நாட்டின் கீழ் இருக்க வேண்டும். நாம் நாட்டைப் பிரிக்க முடியாது. ஒரு கொடியின்கீழ் - ஒரு நாட்டின் கீழ் - அந்தத் தீர்வு இருக்கவேண்டும். அதேநேரம் அதிகாரப் பகிர்வு அளிக்கப்படவேண்டும் என்று நாங்கள் கூறியிருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளவும் நாங்கள் தயார். இதனடிப்படையில் இக்குழுவிடம் ஒரு திட்ட வரைபடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அனைத்துக் கட்சிகளும் ஒரு தீர்வுடன் வரவேண்டும். என்னைப் பொறுத்தவரை என்னுடைய தீர்வையோ, எனது கருத்துக்களையோ நான் கொடுக்க விரும்பவில்லை. எனவே அந்தக் குழுவினர் தங்கள் யோசனைகளை, பிரேரணைகளைக் கொண்டுவரட்டும். அந்தக் குழுவில் என்னுடைய கட்சியும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது.

### கடும்போக்குக் கட்சிகளின் தலையீடு

★ **கேள்வி:** கடும்போக்குவாதம் பேசும் சில கட்சிகளின் ஆதரவு உங்கள் அரசுக்கு இருப்பதால் உங்கள் அரசின் கொள்கைகளில் அந்தக் கட்சிகளின் தாக்கம் இருப்பதாகவும், இதனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலும் கடும்போக்காளர்கள் அழுத்தம் தரக்கூடும் என்றும் தமிழ் மக்களில் சிலர் கருதுகிறார்கள். அவர்களின் அச்சம் குறித்து உங்கள் பதில் என்ன?

★ **ஜனாதிபதி:** ....இப்படிக் கூறுபவர்கள் ஒன்றை நிச்சயம் புரிந்துகொள்ள வேண்டும். நோர்வே நாட்டை சமாதான முயற்சிகளில் இருந்து விரட்ட வேண்டும் என்று இந்தக் கட்சிகள் கேட்டபோது நான் அவ்வாறு செய்யவில்லையே.....!

என்னுடைய கட்சியோ, என்னுடைய அரசோ யாருடைய தாக்கத்துக்கும் - செல்வாக்குக்கும் உட்படவில்லை. மக்கள் மாத்திரம்தான் எங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எங்களுக்கென்று கொள்கை இருக்கின்றது. அதை நாங்கள் அமுல்படுத்துவோம். இந்தக் கட்சிகள் எந்த ஒரு கட்டத்திலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் கூடாது என்று கூறவில்லை. இதுவரையிலும் அப்படி அவர்கள் எங்களைக் கட்டாயப்படுத்தவும் இல்லை.

### புலிகளின் பிரசாரம்

★ **கேள்வி:** தமிழர்கள் அதிகமாக வசிக்கும் வடக்கு - கிழக்கில் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் கொலைகள், ஆள்கடத்தல்கள் தொடர்ந்து நடப்பதாகவும் மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். கிழக்கே தொண்டு நிறுவனப் பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இது குறித்து உங்களது கருத்து என்ன?

★ **ஜனாதிபதி:** .... எல்லாமே விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்ற பிரசாரம். இது அவர்களின் பிரசாரம். அவர்களின் பிரசாரத்தை நம்பாதீர்கள். நீங்களே இதை நேரில் சென்று பாருங்களேன். மக்களிடமிருந்து நிலைமைகளைத் தெரிந்துகொள்ளுங்கள். இதுவரை யாழ்ப்பாணத்தில் இருந்து 5 ஆயிரம் பொது மக்களை நாங்கள் வெளியே கொண்டுவந்திருக்கிறோம். இன்றுகூட கிட்டத்தட்ட ஆயிரம் பேர் திருகோணமலைக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்கள் தெற்கு நோக்கி வர விரும்பினால் அவர்களை நாங்கள் கொண்டு வருவோம். அங்கிருந்து மாணவர்கள் வெளியே வர விரும்புகின்றார்கள். அவர்களையும் நாங்கள் கொண்டுவருவோம். நீங்கள் ஏன் அங்கு சென்று அவர்களைச் சந்திக்கக்கூடாது? நடந்தவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடாது? நாங்கள் எதையும் மீறவில்லை. எனக்கு மக்களின் உரிமைகள் மீதும், அடிப்படை உரிமைகள் மீதும் நம்பிக்கை இருக்கிறது. எனவே மக்களின் எந்த ஒரு உரிமையையும் பாதுகாப்புப் படைகள் மீறுவதற்கு நான் நிச்சயமாக அனுமதிக்கமாட்டேன்.

### இந்தியாவிலிருந்து நிபுணர்களை அழைத்துள்ளோம்

★ **கேள்வி:** மூதூர் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படுகொலை தொடர்பாக விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும் என்ற வகையில் நீங்கள் கருத்துக் கூறியிருக்கிறீர்கள். ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பாக நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய தடயவியல் பரிசோதனைக்கு மேலதிகமானதாக இருக்குமா?

★ **ஜனாதிபதி:** இல்லை.... அந்த விசாரணை மூதூர் சம்பவத்துக்கு மாத்திரம்தான். அதற்காகத்தான் அவர்களை நாங்கள் அழைத்திருக்கிறோம். தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தொடர்பான விசாரணையில் அவர்கள் எங்களுக்கு உதவு வார்கள். ஏனைய பிற விடயங்களுக்கு விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறோம். அக்குழுவின் விசாரணைகளில் பார்வையாளர்களாக இருப்பதற்கு சர்வதேச சமூகத்தைச் சேர்ந்தவர்களை அழைத்திருக்கிறோம். இந்தியாவைச் சேர்ந்த ஒருவரைக்கூட நாங்கள் அழைத்திருக்கிறோம்.(ஐ-12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org